Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 245

சனிக்கிழமை 29 ஜூலை 2023

ஆடி 13 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




## புதைகுழிகளுக்கு நீதிகோரி

# முல்லையில் பெரும் போர்

### ஹர்த்தாலால் இயல்புநிலை பாதிப்பு

**முல்லைத்தீவு, ஜூலை 29**

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கோரியும், இலங்கையில் அவதானிக்கப்பட்ட புதைகுழிகளின் பின்னாலுள்ள உண்மை நிலையை வெளிப்படுத்த வலியுறுத்தியும் முல்லைத்தீவில் நேற்றுப் பேரெழுச்சியான போராட்டம் இடம்பெற்றது. இதைமுன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலால் தமிழர் தாயகத்தின் இயல்புநிலையில் பாதிப்பும் ஏற்பட்டது.** »12

## சீனக் கேந்திரமாக அம்பாந்தோட்டை!

கொழும்பு, ஜூலை 29
சீனா, இலங்கையில் தனது அடுத்த பெரும்கடற்படைத் தளத்தை விரைவில் நிர்மாணிக்கவுள்ளது என்றும், அது அம்பாந்தோட்டையில் அமையவுள்ளது என்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்று தெரிவித்துள்ளது. »12

## செம்மணியின் நீட்சியே கொக்குத்தொடுவாய்!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுக் கண்டனம்

முல்லைத்தீவு, ஜூலை 29
செம்மணியில் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழியின் நீட்சிதான், »10

## புதைகுழிகளின் நீதிக்கான வழி சர்வதேச விசாரணை மட்டுமே!

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூலை 29
தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினால் பிழை எனக் கூறும் அரசியல் தலைவர்கள் »10

## புதைகுழிகளுக்கு நீதி எப்போது?

### கிழக்குப் பல்கலையில் நேற்றுப் போராட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 29
முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் அடையாளம் காணப்பட்ட »09

## பொறுப்புக்கூறலை வலியுறுத்துங்கள்!

### சர்வதேச சமூகத்துக்கு ரவிகரன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூலை 29
இலங்கை அரசின் தமிழர்கள் மீதான அடக்குமுறை மற்றும் இனஅழிப்புச் செயற் »12

## குற்றங்களைத் தடுப்பதற்காக கிளிநொச்சியில் விழிப்புக்குழு

கிளிநொச்சி, ஜூலை 29
குற்றங்கள் அதிகரித்துவரும் நிலையில், குற்றங்களைத் தடுப்பதற்காக விழிப்புக்குழுக்களை உருவாக்கும் யோசனை கிளிநொச்சி மாவட்டத்தில் பரிசீலிக்கப்படுகின்றது. »12

## நண்பன் என்று அழைத்து வாள்வெட்டுக்குத் திட்டம்!

### மயிரிழையில் தப்பிய இளைஞர்

யாழ்ப்பாணம், ஜூலை 29
இளைஞர் ஒருவரின் அலைபேசிக்கு அழைப்பெடுத்து, அவருடைய நண்பரின் பெயரில் அறிமுகமாகி சந்திக்க வருமாறு »12



## ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று கத்தோலிக்க சொரூபங்கள் உடைப்பு

### ஆறுக்கும் மேற்பட்ட இடங்களில் அடாவடி; விசாரணையில் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை 29
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில், ஆறு வேறுபட்ட இடங்களில் கத்தோலிக்க திருச்சொரூபங்கள் உடைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸார் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். »12

## மாகாணங்களின் அதிகாரத்தை நாடாளுமன்றமே தீர்மானிக்கும்!



### சுரேன் ராகவன் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29
மாகாணத்துக்கு அதிகாரங்களைப் பகிர்வதா? அவ்வாறாயின் எவ்வாறான அதிகாரங்களைப் பகிர்வது என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்கும் »12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி கோரி முடங்கியது வடக்கு






யாழ்ப்பாணம்




கிளிநொச்சி




முல்லைத்தீவு





வவுனியா



கொடிகாமம்






வடமராட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## பாராட்டி வாழ்த்துகிறோம்



சிவசேனை சிவதொண்டர்

**N.P.சிறீந்திரன்**

அவர்களுக்கு

17.07.2023 இல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடத்தினால் பொதுச் சட்டத்துறையில் வழங்கப்பெற்ற பட்டத்தை முன்னிட்டு (Dip.in Public Law) மனதார வாழ்த்தி பாராட்டுகிறோம். அவர் மென்மேலும் சட்டத்துறையில் முன்னேறி மதமாற்றிகளுக்கு எதிராக போராடி சைவத்தையும் தமிழையும் காக்க சிவனருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவசேனை,**
**சிவதொண்டர்கள்.**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர் : தனபாலசிங்கம் அகிலன் பெண் காயத்திரி**
**முகவரி : நீதிமன்ற வீதி, மல்லாகம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம்-13, 8ம் கட்டை ஒழுங்கை, இல 156இல் அமைந்துள்ள ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் **தனபாலசிங்கம் அகிலன் பெண் காயத்திரி** என ஆதனப்பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.நாகேந்திரன் பார்த்தீபன் முகதாவில் 798ஆம் இலக்கத்தில் 28.01.2021ஆம் திகதியில் முடிந்த அறுதி உறுதிப்படி சதாசிவ சிவகுமாரசூரியர் கதிர்காமகுமாரசூரியரும் பெண் கேதாரகௌரியும் ஆகியோர் தனபாலசிங்கம் அகிலன் பெண் காயத்திரி என்பவர்களுக்கு அறுதியளித்துள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண் மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறையுமான "தேரன்புலம்" நிலப்பரப்பு 40 பரப்பு குளி 5.74 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம்.சண்முகநாதன், வி.மகேந்திரன் அவர்கள் வரைந்த 4939/2021.01.25 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு - 01.02.03.04 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்.

**கிழக்கு :** தேரன்புல வைரவர் கோவில் ஆதனமும், உஷாயினி ஜெயபாலச்சந்திரனின் ஆதனமும், துரைரத்தினம் ஜெயக்குமாரின் ஆதனமும்
**வடக்கு :** துரைரத்தினம் ஜெயக்குமாரின் ஆதனமும், சதாசிவம் செல்லையரின் ஆதனம்.
**மேற்கு :** முருகையா வசந்தகிருஸ்ணவரனினதும் அப்புத்துரை பாஸ்கரன் பெண் பாலறோகினியினதும் ஆதனமும், பத்மகாந்தன் புனிதவதியின் ஆதனமும், ஒழுங்கையும்.
**தெற்கு :** ஒழுங்கையும், அளவெட்டி வீதியும்
**கிழக்கு :** அறுதி விற்பவரின் ஏனைய ஆதனம்
**வடக்கு :** 15 அடி அகலமான பாதையின் பாதை முகப்பும், தேரன்புல வைரவர் கோவில் ஆதனமும்.
**மேற்கு :** தேரன்புல வைரவர் கோவில் ஆதனம்.
**தெற்கு :** ஜெயபாலச்சந்திரன் பெண் உஷாயினியின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை **தனபாலசிங்கம் அகிலன் பெண் காயத்திரி** எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

(CS/51437)AH-1

## பெயர்மாற்றம்

அராலி தெற்கு வட்டுக்கோட்டையில் வசிக்கும் **சண்முகலிங்கம் கமலவதி** (Shanmugalingam Kamalavathy) ஆகிய நான் எனது பெயரை **சண்முகலிங்கம் கமலாதேவி** (Shanmugalingam Kamalathevy) என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சண்முகலிங்கம் கமலாதேவி** (Shanmugalingam Kamalathevy) என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

**சண்முகலிங்கம் கமலாதேவி**
(Shanmugalingam Kamalathevy)

(CS/51440)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாம். இப்பவென்னெண்டால் பைக் வைச்சிருக்கிறவனெல்லாம் சண்டியனா மாறிக்கொண்டிருக்கிறாங்கள். ஊருக்கு ஊர் இந்தச் சண்டித்தனக் கும்பல்கள் தங்களுக்கு ஒவ்வொரு பேரை வைச்சுக்கொண்டு, கொளுவல் எடுக்க அலையிறது ஒரு வியாதியா பரவத் தொடங்கிட்டுது. இந்தச் சண்டித்தனத் தொத்துவியாதி வந்தால் சில குணம் குறியளை வைச்சுக் கண்டுபிடிச்சுப்போடலாம்.

- விலை கூடின, கடும் ஸ்பீட்டா போற பைக்குகளை வாங்கிறது.

- அதில குருப்பா போய் படம் காட்டுறது

- முகத்தை மூடி லேஞ்சி கட்டிக் கொண்டு பைக் ஓடுறது ஹெல்மெட்டில கொம்பு மாதிரி டிசைன்கள் ஒட்டுறது

- முழங்காலுக்கு கிட்ட போற மாதிரி 'புள்ளிங்கோ' ஜீன்ஸ் போடுறது

- தலைமயிரை சைட்டால அரிச்சு வெட்டி, மேல் பக்கமா யோகிபாபு மாதிரி சடையா வளர்க்கிறது

- மேல சொன்ன குணம் குறியோட இருக்கிற பத்துப் பதினைஞ்சு வியாதிக்காரரோட 'வெட்டு, குத்து, ரத்தம்' எண்டு வாற பாட்டுகளைப் போட்டு ரீக்ரொக் செய்யிறது

இவ்வளவு அறிகுறியும் இருந்தால் ஐமிச்சம் இல்லாமல் அது சண்டித்தனக்கும்பல் வியாதிதான். இப்பிடி முதலே அறிகுறி தெரியேக்கையே வீட்டுக்காரர், முறையான 'பாடமெடுத்தால்' கொஞ்சமெண்டாலும் இப்பிடி வியாதி பரவாமல் தடுக்கலாம்.

அப்பிடி தடுக்காட்டி சண்டித்தனக் கும்பல்கள் பெருகிக்கொண்டேதான் இருக்கும். கோப்பாய் பொலிஸ் பிரிவில செல்வபுரம்- யோகபுரம் எண்ட இடத்தில இப்பிடி வருத்தக்கார குணம் குறியோட ஒரு கும்பல் சுத்தத் தொடங்கியிருக்கு. 'டெவில்-003' எண்டு பேர் வைச்சுக்கொண்டு, பிசாசுகள் மாதிரி மோட்டர்பைக்கை சனத்துக்கு இடிக்கிற மாதிரி ஓடித் திரியினம். இந்தக் கும்பலில ஆமியில இருந்த ரண்டுபேரும் இருக்கினமாம்.

அடிதடியில அமோகமா இறங்கிறதோட, கஞ்சா, ஹெரோய்ன் எண்ட போதைப்பொருள்களை தாங்களும் பாவிச்சு அதையே மற்ற ஆக்களுக்கும் இந்தக் கும்பல் விக்கத் தொடங்கியிருக்கு. இதெல்லாம் பொலிஸுக்குத் தெரியாமல் இருக்குமோ? தெரியுமாம். ஒரு பொலிஸ்காரர்தான் இந்தக் கும்பல் இந்தளவுக்கு வளருறதுக்கு பின்னணியில இருக்கிறாராம்.

வேலியே பயிரை மேய்ஞ்சால் எப்பிடி உருப்படும் ஊர்? ஆரும் சனத்தில அக்கறையுள்ள பொலிஸ்காரர் இந்தக் கும்பலைப் பிடிச்சு, குடுக்க வேண்டியதைக் குடுத்து, அடைக்க வேண்டிய இடத்தில அடைச்சு தங்கட கடமையைச்செய்யமாட்டினமா எண்டதுதான் பட்சியின்ர ஆதங்கம்.



- பட்சி

# இடமாற்றங்களில் எந்தவொரு அரசியல்தலையீடும் இல்லை

## மாவட்டச் செயலர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான உள்ளக இடமாற்றங்களில் அரசியல் தலையீடு இருப்பதாக வெளியாகும் தகவல்களில் எந்தவொரு உண்மையும் இல்லை – இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் 'உதயன் பத்திரிகைக்கு' தெரிவித்தார்.

'யாழ்ப்பாணத்தில் உள்ளக இடமாற்றங்களுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சில உத்தியோகத்தர்களின் பிள்ளைகள், யாழ்ப்பாண நகரப் பாடசாலைகளில் கற்பதால் மாவட்டச் செயலகம் அல்லது யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் இடமாற்றம் வழங்குமாறு அரசியல்வாதிகளுக்கு ஊடாக அழுத்தங்கள் பிரயோகிக்கின்றனர்.

அண்மையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சங்கம் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில், யாழ்ப்பாணத்திலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வெளி மாவட்டத்துக்கு இடமாற்றங்கள் வழங்கப்படாததால் வெளி மாவட்டங்களில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்துக்கு வர முடியாத சூழல் ஏற்படுவதாகத் தெரிவித்திருந்தது.

ஆனால் அதே சங்கத்தின் உறுப்பினர் நல்லூர்ப் பிரதேச செயலகத்திலிருந்து சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதற்கு எதிராக மேன்முறையீடும் சமர்ப்பித்துள்ளார் என அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரனை தொடர்புகொண்டு கேட்டபோது, இடமாற்றங்கள் தொடர்பில் எந்தவொரு அரசியல் அழுத்தங்களும் வரவில்லை. இடமாற்றம் தொடர்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

26 மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. நியாயமான முறையில் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படும்- என்றார். (ஒ-27,125)

# கொள்ளையரையே பதம்பார்த்தது வாள்

## தலைதெறித்து ஓட்டம் வவு.வில் சம்பவம்

வவுனியா, ஜூலை 29

வீடொன்றுக்குள் புகுந்த கும்பலொன்று வாள்வெட்டு நடத்தி கொள்ளையிட முற்பட்டபோது வீட்டு உரிமையாளர் கொள்ளையர்களின் வாளைப் பறித்து சரமாரியாகத் தாக்கியதில் கொள்ளையர்கள் தலைதெறிக்க ஓடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு வவுனியா-நொச்சிமோட்டையில் இடம்பெற்றுள்ளது.

முகமூடி அணிந்து வீட்டுக்குள் புகுந்த கும்பல் வீட்டிலிருந்த இருவர் மீது வாளால் வெட்டிக் காயப்படுத்தியது.

அதனையடுத்து கொள்ளையர்களிடமிருந்து வாளைப் பறித்து பதில் தாக்குதல் நடத்தியபோது வீட்டிலிருந்த தொலைபேசியை எடுத்துக்கொண்டு அந்தக் கும்பல் தப்பியோடியுள்ளது என்று வீட்டின் குடும்பத் தலைவர் பொலிஸில் முறையிட்டுள்ளார். (ச-110,18)

### "நாம் சி.ஐ.டி. கைகளைத் தூக்கவும்"

# பொக்கற்றிலிருந்த பணத்தை அள்ளிச்சென்ற கொள்ளையர்

## குடத்தனையில் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூலை 29

கடைக்குச் சென்ற ஒருவரை வீதியில் வைத்து மறித்து "நாம் சி.ஐ.டி.யினர்" என அடையாளப்படுத்திய இருவர் அவரது சேர்ட் பொக்கற்றிலிருந்த பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்த வழிப்பறிக் கொள்ளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வடமராட்சி கிழக்கு குடத்தனையில் நடந்துள்ளது.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தனின் தந்தையாரிடமே பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

காலை 7 மணியளவில் வீதியில் சென்றுகொண்டிருந்தபோது இருவர் வழிமறித்து தம்மை சி.ஐ.டி.யினர் என அடையாளப்படுத்தினர். உங்களைச் சோதனையிட வேண்டும் கைகளை உயர்த்துங்கள் எனக் கூறினர். குழப்பத்தில் கைகளை உயர்த்தி நின்றபோது உடலைச் சோதித்துவிட்டு சேர்ட் பொக்கற்றிலிருந்த 18 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்குப் பருத்தித்துறைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-100)

# சிவபாலன் சிலை நாளை திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலர் சபை முன்னாள் பொருளாளர் சிவத்திரு.கா.சிவபாலனின் திருவுருவச் சிலை இன்று சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்துக்கு அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் சிலையை திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார். பிரதம விருந்தினராக இந்துசமயப் பேரவை செயலாளர் சக்திகிரீவன் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மாமனும் மருமகனும்

**1987** ஆம் ஆண்டு இலங்கை உள்விவகாரத்தில் இந்தியா தலையீடு செய்தது. தமிழ் மக்கள் சார்பாக என்று சொல்லிக் கொண்டு இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்தது. அன்றைய சூழலில் தமிழ் மக்கள் மாத்திரமே தமது உரிமைக்காகப் போராடி வந்தனர். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதாகக் கூறி மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் மக்களுக்காக மாத்திரமே அதிகாரப் பரவலாக்க யோசனை முன்வைக்கப்பட்டு மாகாணசபை உருவாக்கப்படவிருந்த நேரத்தில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தமிழ் மக்களுக்கு தனித்து அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்தால் தெற்கில் சிங்களவர்களிடமிருந்து எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடும் என்பதால், இலங்கையில் அனைத்துப் பகுதிகளுக்கும் அந்த அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்திச் சமாளித்தார். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பொசிந்ததைப் போல, தமிழர்களின் புண்ணியத்தால்தான் ஒட்டுமொத்த மாகாணங்களுக்கும் கொஞ்சமேனும் அதிகாரங்கள் கிடைத்தன. இப்போது ஜே.ஆரின் மருமகன் ரணில் ஜனாதிபதியாகியிருக்கின்றார். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் கரிசனையுள்ளவராக தன்னை இதுவரை காண்பித்து வந்த அவர், கடந்த புதன்கிழமை சர்வகட்சிக் கூட்டத்தை ஜனாதிபதி செயலகத்தில் கூட்டியிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் அவர் தெரிவித்த கருத்து மிக முக்கியமானது. ''அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்துரையாடுவது போதுமானதல்ல. அது முழு நாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடியே தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு'' என்று ரணில் குறிப்பிட்டிருந்தார். தனது மாமனார் 1987ஆம் ஆண்டில் எத்தகைய நரித்தந்திரத்தை கையாண்டாரோ அதையே இப்போதும் அவர் கையாள முற்பட்டிருக்கின்றார். ஜே.ஆருக்கும் ரணிலுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பதை தமிழ்த் தலைவர்கள் இனியாவது உணரவேண்டும்.

'பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு, புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம், எனக்கு மாத்திரமன்றி இதற்கு முன்னர் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஏழு ஜனாதிபதிகளுக்கும் இருக்கவில்லை. புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே இருக்கின்றது. நாட்டுக்காக யோசனைகளை முன்வைப்பது மாத்திரமே எனது கடமை. இதனை நாடாளுமன்றமே நிறைவேற்ற வேண்டும். நாடாளுமன்றத்தில் ஒரேயொரு வாக்கு மட்டும் வைத்துக்கொண்டு இதனைச் செய்ய முடியாது. இந்தப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைவரும் கூட்டாக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்' என்றெல்லாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சிக் கூட்டத்தில் பிரசங்கம் நடத்தியிருக்கின்றார்.


நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவு நடந்தபோது ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அவர் மாத்திரமே இருந்தார். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு 134 வாக்குகளும் அவரை எதிர்த்துப்போட்டியிட்ட டலஸூக்கு 82 வாக்குகளுமே கிடைத்தன. அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் 21ஆவது திருத்தச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஏன் சர்வதேச நாணய நிதியம் தொடர்பான பிரேரணையும் இந்த நாடாளுமன்றத்தில்தான் நிறைவேற்றப்பட்டது. ஆக ஒரேயொரு வாக்கையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டிருந்தாலும், அவர் தலைமையிலான அரசாங்கம் தனக்குத் தேவை என்று கருதிய எல்லாவற்றையும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக்கூடிய பலத்துடன்தான் இருக்கின்றது. அதற்கு முக்கியமான காரணம், பொதுஜன பெரமுனவின் உடலும், ரணிலின் தலையும் இணைந்து ஒருடலாகி, ஆட்சியைச் சுவைப்பதுதான். அதனால் பொதுஜனவின் வாக்குகளெல்லாம் இப்போது ரணிலின் வாக்குகளே. அதனால்தான் இன்றுவரையில் அந்த அரசாங்கம் நாடாளுமன்றத்தில் முன்வைத்த எந்தவொரு விடயமும் தோற்கடிக்கப்படவில்லை. நிலைமை இதுவாக இருக்கையில், 13 ஆவது திருத்தம் தொடர்பில் பேசும்போது மாத்திரம் நாடாளுமன்றத்தில் தனக்கு ஒரு வாக்குத்தான் இருக்கின்றது என்று ஒப்பாரி வைப்பது, அரசியல் தீர்வை வழங்குவதில் ரணிலுக்கு எள்ளளவும் விருப்பு இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒன்றுமேயில்லாத, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட – மத்தியால் எப்போது வேண்டுமானாலும் தன்னிச்சையாக அதிகாரங்களை பிடுங்கக்கூடிய 13 ஆவது திருத்தத்தை வைத்துக்கொண்டு சிங்கள அரசு 36 ஆண்டுகளாக தமிழினத்தை ஏய்த்து வருகின்றது. தமிழ்த் தலைவர்களும் அதைப் புரிந்துகொள்ளாமல் 13 இன் பின்னால் ஓடிக்கொண்டிருந்தால் ரணில் அல்ல ராஜபக்ச குடும்பத்தின் பேரனும் நாளை ஜனாதிபதியாகி இப்படியே எங்களை வைத்து விளையாடக்கூடும்.

நாளொரு நல்வார்த்தை

"எப்பொழுது நாம் நமது எண்ணங்களை ஒழுங்காக வழிநடத்துகிறோமோ, அப்பொழுது நம்மால் நமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடிகின்றது"

– வில்லியம் கிளமெண்ட் ஸ்டோன்




# வடக்கு - கிழக்கால் நாடெங்கும் தாக்கம்

## மனோ விவரிப்பு



கொழும்பு, ஜூலை 29

**தேசியப் பிரச்சினையின் பிரதான மையம் வடகிழக்கு என்பது சரி. ஆனால் அதன் தாக்கம் நாடெங்கும் சுழல்கிறது என்பதை அனைவரும் மனதில் கொள்ளவேண்டும் - இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளதாவது,

கல்வி, சுகாதாரம் இரண்டிலும் மிகப்பல அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு உள்ளன. இந்த விடயங்களில், இன்னும் மேலதிக அதிகாரங்களை பெற்றுத்தந்து, தமிழருக்கு உதவிட பல நாடுகள் இன்றும் தயார்.

பொலிஸ் அதிகாரம் ஒரு மட்டம்வரைதான் சட்டப்படி உண்டு. ஆனால் அரசு அதையும் தரவே இல்லை. இனியும் தராது. பிடுங்கி எடுக்க, தமிழருக்கு உதவிட உலகில் ஒரு நாடும் இன்று இல்லை. இது எனக்கு பட்டவர்த்தனமாக விளங்குகிறது.

நான் ஆலோசனை கூறுகிறேன். வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் முடிவு செய்யட்டும் - என்றுள்ளது. (ஒ-இ)

# கடன் மறுசீரமைப்பில் மக்களை வதைக்காதீர்



## சஜித் அறிவுரை

கொழும்பு, ஜூலை 29

தேசிய சேமிப்பு வங்கியில் தற்போதுள்ள செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் குறித்து பொறுப்புக் கூறப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தேசிய சேமிப்பு வங்கியின் ஐக்கிய ஊழியர் சங்க அதிகாரிகளுக்குமிடையே சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தேசிய சேமிப்பு வங்கியில் தற்போதுள்ள செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் குறித்து பொறுப்புக் கூறப்படவேண்டும்.

அரசியல் பழிவாங்கல் கடுமையாக தேசிய சேமிப்பு வங்கியில் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

தேசிய கடன் மறுசீரமைப்பு நிபந்தனை சர்வதேச நாணய நிதியம் விதித்த நிபந்தனை அல்ல. இணக்கப்பாட்டின் போது தற்போதைய அரசாங்கத் தரப்பால் முன்வைக்கப்பட்டதொரு நிபந்தனையே அதுவாகும். இந்த இணக்கப்பாட்டுச் செயன்முறை முற்றிலும் வேலை செய்யும் மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகமாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (ச-ரி2)

நாளை

30.07.2023

ஞாயிற்றுக்கிழமை

ஆடி 14

சுபநேரம் : 09.03 - 10.33

ராகுகாலம் : 04.33 - 06.03

பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை நூல்கள் வெளியீடு நாளை

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி கவிஞர் ஔவையின் 'திருத்தொண்டர் சரிதம்', 'உண்மையைத் தேடி' ஆகிய இரண்டு கவிதை நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சிவன் வீதியிலுள்ள கலாசார மண்டபத்தில் பி.ப. 2 மணிக்கு பத்தரை சிறீபாத தேசிய கல்வியியற் கல்லூரி மூத்த விரிவுரையாளர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணக்கியல் துறை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலுக்கான ஆசியுரையை உசன் கந்தசுவாமி கோவில் பிரதம குருக்கள் சிவசிறி இ.கேதீஸ்வ ரக் குருக்கள், வாழ்த்துரையை கலாநிதி ஆறு. திருமுருகன், வெளியீட்டுரையை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்ல ருவி ச.லலீசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியை கைதடி சிறீசச்சிதானந்த ஆச்சிரமத் தலைவர் இ.குழந்தைவடிவேல், யாழ். பல்கலைக்கழக ஆங்கில கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் தலைவருமான சு.சுந்தரேஸ்வரன் ஆகியோர் பெறவுள்ளனர். (ச-ரி)

## அறநெறி ஆசிரியர்களுக்கு கீரிமலையில் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29

தெல்லிப்பழைப் பிரதேச செயலக இந்து கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் அகில இலங்கை சைவ மகாசபையின் அனுசரணையில் வலிகாமம் அறநெறி ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 9 மணிக்கு குழந்தைவேல் சித்தர் சிவாலய சைவ அறப்பணி மையத்தில் இடம்பெறவுள்ளது.

செயலமர்வில் அறநெறிக் கல்வியில் பண்ணிசைப் பயிற்சி சங்கீத ஆசிரியர் திருமதி.தேன்மொழியால் வழங்கப்படவுள்ளது. அத்துடன் அறநெறிக்கல்வியில் ஆர்வம் தூண்டும் உத்திகள் மற்றும் "சைவம் காட்டும் மானிடம்" எனும் தலைப்பில் கருத்துரை ஆகியவற்றை அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் மருத்துவர் கலாநிதி. ப. நந்தகுமார் நிகழ்த்தவுள்ளார்.

(ச-ரி2-66)


**வாடகைக்கு**

யாழ். கச்சேரியில் இருந்து ஒரு நிமிட நடை தூரத்தில், புதிதாகப் புனரமைக்கப்பட்ட இணைந்த வீடு. ஒரு அறை, Hall, சமையலறை, குளியலறை வாடகைக்குண்டு. அரச சேவையில் உள்ளவர்கள், பெண்களுக்கு முன்னுரிமை.

51404)AH-1

**077 142 2846**

**வீடு / காணி வாடகைக்கு**

A-9 வீதி, கச்சேரிக்கு அண்மையில் அமைந்துள்ள வீடு / காணி வாடகைக்கு விடப்படும். தொழில்புரிபவர்கள் / மாணவர்கள் குழுவாகத் தங்குவதற்கு அல்லது நிறுவன பாவனைக்கு மட்டும் வழங்கப்படும்.

(CS51439)

**075 979 9161, 077 769 9212**


## பங்குதாரர்களுக்கான அறிவித்தல்

**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)**

**78வது வருடாந்த பொதுக்கூட்டம்**


கம்பனியின் **78 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2023 வைகாசி மாதம் 28 ஆம் திகதி** நடைபெற்றதன் தொடர்ச்சியாக **2023 ஆடி மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00** மணியளவில் **"யாழ்ப்பாணம் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில்"** நடைபெறும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

இல.530, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

கம்பனி செயலாளர்.

(CS/51469)AH-1

## ஓராண்டு நினைவஞ்சலி



வரவு 19 . 09 . 1963

பிரிவு 09 . 08 . 2022

**அமரர் திரு. செல்லையா ரஞ்சன்**

(அலுவலகப் பணியாளர் – விசேட தரம்
வலயக்கல்வி அலுவலகம் – யாழ்ப்பாணம்.)

திதி : துவாதசி (29.07.2023)

ஆண்டு ஒன்று ஆனதுவே
ஆருயிரே உமைப்பிரிந்து
தூண்டாமணி விளக்காய்
துணையுள்ளீர் என்றிருந்தோம்
கவனமாக சென்றுவரச் சொல்லிவிட்டு
மறுகாலை கண்மூடி மௌனித்ததேன்?
நம்ப முடியவில்லை நடந்ததனை
யோகமற்றுப் பாவியானோம்
வெறுமை தாங்க முடியவில்லை
எம் வேதனை சொல்ல வார்த்தை இல்லை ஐயனே!

தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(CS/25650)AH-1

63/4, பலாலி றோட், 6ம் ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 31 . 10 . 1954

இறப்பு 24 . 07 . 2023

**திருமதி சோமஸ்கந்தன் சறோஜா**

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் 46485,Wesel, ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜா கடந்த (24.07.2023) அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. கார்த்திகேசு பொன்னையா (மலேசியன் பென்சனியர்) அவர்களின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் (ஆசிரியர்) கமலாம்பாள் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற செல்லத்துரை (ஆசிரியர்) மற்றும் சிவமணி (பிரான்ஸ்) தம்பதியரின் மருமகளும், சோமஸ்கந்தன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மனைவியும், ஜெனனி (ஜேர்மனி), சுகன்ஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருட்சோதிநாதன் (கனடா ஒன்றியா) அவர்களின் அன்புச் சகோதரியும், விவேகானந்தன் (பிரான்ஸ்), வித்தியானந்தன் (பிரான்ஸ்), நித்தியானந்தன் (டென்மார்க்), தயானந்தன் (பிரான்ஸ்), கலாவாணி (பிரான்ஸ்), விஜயராணி (பிரான்ஸ்), ரவீந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், ஜெயசாந்தி (கிளிநொச்சி), ஜெயக்குமார் (கிளிநொச்சி) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (31.07.2023) திங்கட்கிழமை Wesel, ஜேர்மனியில் நடைபெறும். என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கோப்பாய் வடக்கு.

தகவல்: குடும்பத்தினர்
0049 1525 1929 770

(cs 51434) (N.1)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணிற்கு 22.06.1989

விண்ணிற்கு 29.07.2021

**அமரர் திரு. பாலசுப்பிரமணியம் செந்தூரன்**

(இசை ஆசிரியர்)

எங்கள் முத்தே முழுமதியே செந்தூரா
சொர்க்கத்துக்கு விரைவில் சென்றதேனோ ஐயா!
செந்தூர்க்குட்டி என உனைத்தேடிய உன் அன்னை
ஒன்றரை ஆண்டில் உனை தாலாட்ட விண்ணகம் வந்தார்
உங்கள் நினைவில் நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
எங்கள் உயிர்மூச்சு உள்ளவரை உங்கள் நினைவு தொடரும்.....
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 07 . 1951

மறைவு 26 . 07 . 2023

**திருமதி அகிலாண்டநாயகி சடாச்சரம்**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அகிலாண்டநாயகி சடாச்சரம் கடந்த (26.07.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதபிள்ளை மற்றும் அன்னலட்சுமி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்தையா சடாச்சரத்தின் பாசமிகு மனைவியும், சிதம்பரவல்லி பாரத்தின் (லண்டன்) பாசமிகு தாயாரும், செல்வராஜா பாரத்தின் (லண்டன்) பாசமிகு மாமியாரும், கரிகாலன், ஆதித்யன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) மற்றும் கதிர்காமநாதன் (எழுத்தாளர்), Dr. திரிபுரநாயகி (கொழும்பு), செந்தில்நாயகி (பிரான்ஸ்), திருத்தணிகைநாதன் (Founder and Director Straformance Management Services Pvt Ltd), கேதாரநாயகி (கனடா), குமர குருபரநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
க.சடாச்சரம் (கணவர்)
பா. சிதம்பரவல்லி (மகள்)

மானிப்பாய் வீதி,
உடுவில்.

(CS 51435) AH-1

**077 949 1417, 077 239 5285**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




## வாழ்த்துச் செய்தி

**திரு. பொன்னையா ரவிச்சந்திரன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கிறிஸ்தவ பாட ஆசிரியராக 6. ஆண்டுகளாக கடமையாற்றி இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி வசந்தி பாலராஜா அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்வுறுகின்றேன். மணி விழா வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின் றேன். மணிவிழா நாயகியின் உன்னதமான தினம் இது என நான் கருதுகிறேன். மாண வர்களாக, பழைய மாணவர்களாக விளங்குபவர் களே ஆசிரியையின் கல்விப் பணிக்குச் சான்றா கும். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கொண் டிருக்கின்ற ஆசிரியையின் ஓய்வுக்காலம் சிறக்கவும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன்.

## வாழ்த்துச் செய்தி



**திரு. ஆ. நவநீதகிருஷ்ணன்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**ஆசிரிய வட்டத் தலைவர்**

அகவை அறுபதில் மணிவிழாக் காணும் எமது கல்லூரி ஆசிரியை திருமதி பாலராஜா கிறேஸ் வசந்தி அவர்களை வாழ்த்துவதில் ஆசிரிய வட்டம் பெருமை கொள்கின்றது. இப்பாடசாலையில் கிறிஸ் தவ பாட ஆசிரியராக கடமையை ஏற்று கடமை. கண்ணியம், கட்டுப்பாடு மிக்க ஒரு மாணவ சமூகத்தை உருவாக்கியுள்ள உங்களின் ஆளுடை ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக அமை கின்றது. உயர்வான சிந்தனையும், எளிமையான வாழ்வும் உங்களின் இயல்புகளாக அமையப் பெற்றவை. எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற வாக்கியத்திற்கு அமையப் பணியாற்றி னீர்கள். மணிவிழாக் காணும் நீங்கள நீடூழி காலம் வாழ வாழ்த்துவதோடு சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.



## GRACE VASANTHY BALARAJAH

**B.A, Dip.in Ed.**

- Educated at : Jaffna College, Vaddukoddai
- Higher Education : Jaffna University, PDGE, Maharagama,
- Served at
  - I. Jaffna College
  - II. Angel International School Manipay.
  - II. Mannar St. Xevier's boys College
  - III. Nelliady Central College
  - IV. Jaffna Central College.



## கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

**அதிபர்,**
**திரு.சி.இந்திரகுமார்**

இன்றையதினம் மணிவிழாக்காணும் திருமதி கிறேஸ் வசந்தி பாலராஜா அவர் களை வாழ்த்துவதில் மிக மகிழ்வடைகின்றேன். கிறிஸ்தவ பாட ஆசிரியராக இருந்து கல்லூரியையும் மாணவர்களையும் நேசித்தவராக ஆசிரியர் விளங்குகின்றார். கடமை ஒழுக்க விழுமியம் என்பவற்றை மாணவர்களின் மனங்களில் வேரூன்றக் காரணமானவர். மாணவர்கள் மத்தியில் தனித்துவமான இடத்தினைப்பெற்றவர். இவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துவதோடு எல்லா வகைச் செல்வங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.


## Message of appreciation

**Mr.P.Ramakrishnan - ISA Sinahala,**
**Zonal Education Office.**

I would like to give a few words for the appreciation of the service Mrs Grace Vasanthy Balaraja from Jaffna Central College had been in forefront to implement the second national and trilingual programme in the school. She tremendously helped in many ways for the development of language skill among the students.

During the tenure of service I found her vigor and persouality in the teaching and learning activities in the classroom.

Most of the students acheived the expected targets in language field in the need of time. She coverd the allocated time peried in the time table for the development of Sinhala Languages. Even She is at the age of Sixty her personality still seems very young and active to perform the task. Now, She is attaired the age to retire from the service the community expects for the assistance of her services marking for her retirement life would be peace and prosperous for the future endeavours.



## வாழ்த்துச் செய்தி

**திரு. பொன்னையா ரவிச்சந்திரன்**
**வலயக்கல்விப்**
**பணிப்பாளர்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சங்கீத பாட ஆசிரியராக 6 வருடங்கள் பணியாற்றி இன்றுடன் தனது சேவையை நிறைவு செய்து கொள்கின்ற இசை ஆசிரியர் திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம் அவர்களது சேவை நயப்புக் குறித்து வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். "இசையால் வசமாக இதயம் ஏது" என்பார்கள் அவ் வகையில் இசையை இசையாகக் கற்பித்து தனித்துவமான இடத்தினைப் பெற்றுக் கொண்ட இசை ஆசிரியர். வள்ளுவர்,

"தக்கார் தகவிலார் என்பது
அவரவர் எச்சத்தாற் காணப்படும்"

என்று கூறியதைப் போன்று மாணவர்களை நல்வழிப்படுத்தியிருக்கிறார். சேவைநலன் காணும் ஆசிரியரை நீடூழி காலம் சகல சௌபாக்கியங் களையும் பெற்று வாழ்க வாழ்க என வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன்.

## வாழ்த்துச் செய்தி



**திரு. ஆ. நவநீதகிருஷ்ணன்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**ஆசிரிய வட்டத் தலைவர்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இசை ஆசிரியராக 6 ஆண்டுகளாக கடமையாற்றி இன்றைய தினம் தனது சேவையை நிறைவு செய்து கொள்கின்ற திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந் தன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடை கின்றேன். தமக்கென பாரியதொரு மாணவ சமூகத்தை உருவாக்கிய பெருந்தகை. மாணவர் களுக்கு அறிவுக்கண்களைத் திறத்தலே என் பணி என்று கண்ணியமாகப் பணியை மேற்கொண்டவர். கனிவான பேச்சு எல்லோரையும் அரவணைக்கும் பண்பு உங்களின் தனித்துவம்.

"வெள்ளத்தனைய மலர் ஓட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

என்ற குறட் பாவுக்கு ஏற்ப உயரியவாழ்வு வாழ்ந்த தங்களின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைபரம் பொருளின் ஆசி வேண்டி வாழ்த்து கின்றேன்.



## திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம்

(Dip.in Carnatic Music)

**யாழ். பல்கலைக்கழகம் 1982 – 1986**

- ஆரம்பக் கல்வி : யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் - தரம் 1 – தரம் 11
- இடைநிலைக் கல்வி : யா/ கன்னியர்மடம் மகா வித்தியாலம் - தரம் 12 – 13
- முதல் நியமனத் திகதி : 25.08.1989

**ஆசிரியர் சேவை விபரம்**

- யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் - 28.08.1989 - 01.11.1989
- யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்
  யா/ சென்றோக் வித்தியாலயம் (பகுதி நேரம்) } 02.11.1989 - 19.06.1990
- யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் - 20.06.1990 - 31.01.1992
- யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை - 03.02.1992 - 16.10.2017
- யா/ மத்திய கல்லூரி - 17.10.2017 - 30.07.2023



## அனுபவம் நிறைந்த இசையாசிரியை

**அதிபர்,**
**திரு. சி. இந்திரகுமார்**

"பண்புடையார் பட்டு உண்டு உலகம்" என்ற வள்ளுவன் வாக்குக்கு இணங்க நற்பண்புகள் பலவும் ஒன்று சேரப் பெற்ற அனுபவம் நிறைந்த இசையாசிரியராக விளங்கியவர் திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம் அவர்கள். இவ் வாறான ஆசான்கள் இன்றும் வாழ்வதனால் அன்றோ இந்த உலகு இன்னும் நிலை பெற்று நிற்கின்றது திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம் அவர்கள் கடந்த ஆறு வருட காலமாக எமது கல்லூரியில் இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கு இசையாசிரியராக இருந்து இசையோடு நல்லொழுக்கங்களையும் கற்பித்து மாணவர் மனங்களில் நீங்காத இடத்தினைப் பெற்றவர். கடனுக்காக வேலை செய்யாது கடமையுணர்வொடு செயலாற்றிய நல்லாசான். ஓய்வுபெறும் வயதை அண்மித்த காலத்தில் கூட நோயென்று துவண்டிடாது தன்னால் முடிந்தளவு துடிப்போடு செயற் பட்டவர். கல்லூரி வளாகத்தில் ஏழுமணிக்கே சமுகம் தரும் அவர் தன் கடமையில் கண்ணாய் இருந்தவர். தன் ஆழ்ந்த அறிவு புலமை அநுபவங்களால் ஏனைய ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக நடந்து வழிகாட்டியவர். தன் தெளிவான உச்சரிப்பினாலும் இனிமையான குரலாலும் வசந்தக் குயிலாக ஒலித்தவர். திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம் அவர்கள் தன் இனிய குடும்ப உறவுகள் சூழ மென்மேலும் சிறப்பும் மேன்மையும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டி வாழ்த்தி வணங்கு கின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

**திரு. து.துசியந்தன்**
**பதில் அழகியல் உதவிக்கல்விப்**
**பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்.**

34 வருடங்கள் கலைக்கும் கல்விக்கும் நற்பணிபுரிந்து அரச பணியில் இருந்து ஓய்வுபெறும் திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின் றேன். வடக்கில் தலைசிறந்த கல்லூரி களில் பணியாற்றி நல் மாணாக்கர்களை உருவாக்கிய வர். கர்நாடக சங்கீதத்தில் வித்துவம்மிக்க இவர் பாட அடைவுமட்ட உயர்ச் சிக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய தோடு தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவர் தேசிய மட்டத்தில் வெற்றி மகுடம் சூட பயிற்சி அளித்தவர். கவின் நிலை மேம்பட சாங்கீத கூடத்தில் அவரின் கற்றல் கற்பித் தல் செயற்பாடுகள் முன்மாதிரியாக அமைந்தமை எனது அவதானிப்பாக அமைந்தது. இந்த வகையில் அவரின் ஆசிரிய பணிக்குப் பாராட்டுத் தெரிவிப்பதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

**வாழ்த்துவோர் :**

**ஆசிரியர் வட்டம்**
**யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
27 • 07 • 1938



இறப்பு
26 • 07 • 2023

## திருமதி கங்காதேவி இராஜரெட்ணம்

கொழும்பை பிறப்பிடமாகவும் யாழ். அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கங்காதேவி இராஜரெட்ணம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் பொன்னம்பலம் இராஜரெட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மேனன் மாரியம்மாவின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பொன்னம்பலம் கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் ஸ்ரீராஜேந்திரராஜா, ஸ்ரீதேவி, ஸ்ரீகலாதேவி, காலஞ் சென்ற ஸ்ரீஸ்ரெல்லாதேவி மற்றும் ஸ்ரீரேனுகாதேவி, ஸ்ரீரெட்ணதேவி, ஸ்ரீகணேஸரெட்ணம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயதேவி, உதயன், ராகவன், ராஜ்குமார், பாஸ்கரன், கமலநாதன், சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நாளை (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 418, நாவலர் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலும், அருகாமையில் அமைந்துள்ள I.C.M.M. திருச்சபையில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று அதனைத் தொடர்ந்து இருபாலையில் அமைந்துள்ள I.C.M.M. துயிலும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25709) A-1

# மரண அறிவித்தல்

அவனிதனில்
18 • 03 • 1942



இறையடியில்
28 • 07 • 2023

## நாகலிங்கம் தங்கராஜா

யாழ். அச்சுவேலி வடக்கு மடத்தடியை பிறப்பிடமாக கொண்ட நாகலிங்கம் தங்கராஜா அவர்கள் நேற்று (28.07.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நாகலிங்கம் பொன்னு தம்பதியரின் பாசமிகு புதல்வரும், செல்லத்துரை பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், லலிதாதேவி அவர்களின் அன்புக் கணவரும், சுஜாதா, விஜிதா, ஜெகதா, மதனிகா, கல்யாணி ஆகியோரின் பாசமிகு அப்பாவும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, சின்னராசா மற்றும் அன்னராசா, இந்திரராஜா ஆகியோரின் சகோதரரும், வைத்தீஸ்வர, சிவபாதம், சீலன், சுந்தர், ஈசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரிஷி, சானுஜன், சாமந்தி, லதுர்ஜா, அதிஸ்வர், சுவாதி, அபிஷேகா, மித்ரா, சிபி ஆரியன், மாயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின பூதவுடல் தெஹிவளை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (29.07.2023) சனிக்கிழமை காலை 09.30 மணி முதல் மாலை 7.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (30.07.2023) காலை 8.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10.30 மணிக்கு தெஹிவளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புக்கு:
077 0155 108, 076 0477 941

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 40303) A-1

# மரண அறிவித்தல்

மலர்வு
15 • 11 • 1960



உதிர்வு
28 • 07 • 2023

## திருமதி புனிதவதி பத்மநாதன்

மண்டைதீவு 8ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.19, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி பத்மநாதன் அவர்கள் நேற்று (28.07.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான விஜயரத்தினம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நிறேகாவின் அன்புத் தாயும், சசிந்தனின் அன்பு மாமியும், ஹிஷோத், மதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் சபாநாயகம் (செட்டி) காலஞ்சென்ற பாலேஸ்வரி மற்றும் சாந்தமலர், நீலாம்பிகை சூரியகாந்தன் (கொழும்பு), சத்தியமூர்த்தி (ஜேர்மனி), சந்திரகுமார் (சுவிஸ்), சந்திரபாலு (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விஜயகணபதி மற்றும் புனிதவதி, ராஜசேகரம் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் காந்திமதி, காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, நாகராசா, கெங்காதரன் மற்றும் லலிதா கிருஸ்ணபிள்ளை காஞ்சனாதேவி கோமளாதேவி கமலேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

076 58 69 309
077 22 83 366

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25711) A-1

# மரண அறிவித்தல்

மலர்வு
16 • 02 • 1948



உதிர்வு
23 • 07 • 2023

## திருமதி திருநாவுக்கரசு கமலாம்பிகை

நாரந்தனையை பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு கமலாம்பிகை அவர்கள் கடந்த (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாகம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு அவர்களின் (ஓய்வுபெற்ற அதிபர்) பாசமிகு மனைவியும், அமரர் நாகரத்தினம், அமரர் கோபாலப்பிள்ளை, அமரர் சீவரத்தினம், அமரர் செல்வரத்தினம் சிவஞானசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேந்திரராசா, செல்வராசா, நவரத்தினராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனுரேகா (கொலண்ட்), இந்துரேகா (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி), கேமச்சந்திரன் (S&T Company, Colombo), பிறேமச்சந்திரன் (ஜேர்மனி), ஜேனுரேகா (ஜேர்மனி), பவளச்சந்திரன் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமார் (கொலண்ட்), மிதிலா, சுரேஸ் (ஜேர்மனி), ஜீவிதா (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கம்சிகா, ஹர்சிகா, ஹிரிசன், நவிஸ்ணு, சாருக், சித்திக், திரிஸ், கபிஸ்னா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஓம் ஒழுங்கை, சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 198 4776, 077 2395 856

(CR 40303) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதைகுழிகளுக்கு...

மனிதப் புதைகுழிக்கு நீதிகோரியும், தமிழர் தாயகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்தும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை - கலாசார பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பல மாணவர்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர். (அ-ம-125)

## முழுமதி அரங்கம்

வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலை வரும் பனை, தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச்சங்க நிறுவுநரில் ஒருவருமான அமரர் தம்பு. சிவலிங்கத்தின் ஞாபகார்த்த முழுமதி அறிவியல் அரங்கம் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது. நிலைய உபசெயலாளர் நா. குமணதாசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் சிறுவர் மற்றும் இளையோருக்கான சட்ட விழிப்புணர்வு வினாடி வினாப் போட்டி மற்றும் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

(ச-ரி2)


**The Royal College of Jaffna**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில By **விக்னேஸ்வரன் ஆச்சார்யார்**. 25 வருட அனுபவம். வகுப்புகள் சங்கானை, யாழ்ப்பாணம்.

**Tel: 077 6751649**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 . 03 . 1991 — உதிர்வு 08 . 08 . 2022

**அமரர் தர்ஷிகன் தனபாலசிங்கம் (ரமணா)**

திதி: 29.07.2023

வையகத்தில் நீ வாழ்ந்தது போதுமென்றோ
காலனவன் கைச்சிறைக்குள் - உம்மை
அழைத்து சென்றுவிட்டான் - எம்மை
கண்ணீரோடு தவிக்கவிட்டு போனதேனோ
சிரித்து பேசி எம்மை கலகலப்பாக
வைத்திருந்த அன்புச் செல்வமே!
மாறாக்கவலையுடன் எம்மைவிட்டு
நீர் சென்ற இடம்தான் எதுவோ?

உந்தன் காலடியில் எமது கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இல. 86 காளி வீதி,
கெஹிவளை.
077 601 0173

பெற்றோர், மனைவி,
சகோதரிகள், மைத்துனன்,
உறவினர்கள், நண்பர்கள்.


## யாழ்ப்பாணம் மடம் வீதி "பட்டபிளை விளையாட்டுக் கழகம்"

**46ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நாளை (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை பின்வரும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது.**

- ✓ சைக்கிள் ஓட்டம் - 50km
- ✓ உள்ளக வீதி ஓட்ட மரதன் 10km
- ✓ உள்ளக மெய்வல்லுநர் போட்டி

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பின்வரும் இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும்.
M. சங்கர் - 077 800 4186
R. ராதா - 077 189 0957

(அன்றைய தினம் மாலை பரிசளிப்பு இடம்பெறும்)

அனுசரணை:
T.S. கிறேசியன் (பிரான்ஸ்)

தலைவர்
M. சங்கர்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 10 . 1941 — மறைவு 28 . 07 . 2022

அமரர்
**கப்ரியல்பிள்ளை அருளப்பு**


ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம்வெந்து மாய்கின்றோம்.
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே!
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித திரேசாள் ஆலயத்தில் (றக்கா வீதி) 29.07.2023 முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்குபற்றி தொடர்ந்து "கலைதூது கலையகத்தில்" (இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.) நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

35B, சோமசுந்தரம் அவனியு,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு கடந்த
(02.07.2023)
ஞாயிற்றுக்கிழமை அன்று
இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தசாமி கந்தையாபிள்ளை**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரை அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் (01.08.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைபேசியூடாக இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்

(cs 51436) (N.1)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 . 12 . 1959 — மறைவு 20 . 07 . 2021

**திரு.நன்னித்தம்பி தயாசீலன்**

(தோப்பு, அச்சுவேலி, யாழ்ப்பாணம்)

உங்களை இழந்து ஈராண்டு ஆனது.
ஆயினும் அன்புத் துணையாக, அருமையான அப்பாவாக
உங்கள் நினைவுகள் எம்முடன் நிலைத்திருக்கும்.
எம்மை வழிப்படுத்தும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி- கண்ணகி தயாசீலன்
மகள் - இலக்கியா தயாசீலன்

33,9, Dundalk Drive,
Scarborough,
Canada.

+14 372154442
+94 771109786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதைகுழிகளின்...

உள்ள நாட்டில், புதைகுழிகளுக்கு நீதி கிடைப்பதற்கான ஒரேவழி சர்வதேச விசாரணையே என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

ஹர்த்தாலின் ஒரு பகுதியாக முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு தழுவிய முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாயில் அளவுகணக்கு தெரியாதளவில் போராளிகள், மக்கள் ஆயிரக்கணக்கில் புதைக்கப்பட்டனர். அத்தகைய மனிதப் புதைகுழிக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ்த் தேசிய மண்ணில் ஏராளம் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்தப் புதைகுழிகளின் உண்மைநிலை வெளியில் வருமானால், இலங்கையின் கடற்படை, விமானப்படை, பாதுகாப்புப் படை என்பனவற்றின் நடவடிக்கைகள் கேள்விக்குட்படுத்தப்படும். ஆதலால்தான், நீதியான விசாரணையொன்றை சர்வதேச சமூகத்திடம் நாம் கோருகின்றோம்.

இலங்கை அரசாங்கத்திடம் நீதியை எதிர்பார்க்க முடியாது. தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினால்கூட அதனை பிழை என்று கூறும் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இருக்கும்வரை இலங்கையின் நீதித்துறை சரியாகச் செயற்படுமா? இவர்களால் நீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமா? என்பது கேள்விக்குறியே - என்றார். (அ-ம)

## செம்மணியின்...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி என்று வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

காலாகாலமாக தமிழினத்தின் மீது இனவழிப்பை மேற்கொண்டுவரும் சிங்களப் பேரினவாதமானது மனிதப் புதைகுழிகளையே தமிழ் மக்களுக்கு பரிசாகக் கொடுத்துள்ளது. செம்மணியில் ஆரம்பித்த மனிதப் புதைகுழியானது இன்று கொக்குத்தொடுவாய் வரை நீண்டுள்ளது. 1984ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி கொக்குத்தொடுவாய் மற்றும் அதனை அண்டிய முல்லைத்தீவின் தெற்கு எல்லைக் கிராமங்களில் 131 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அந்தப் படுகொலைகளுடன் கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னர் சிங்கள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் அந்தப் பிரதேசம் இருந்தது. போர் முடிந்த பின்னரே அங்கு மக்கள் குடியேற்றப்பட்டனர். எனவே போர் நடந்த காலப்பகுதிக்குள்தான் இந்தப் புதைகுழி தோன்றியிருக்கவேண்டும். அதைவிட போர்க்காலத்தில் பயன்படுத்தப்பட்ட உடைகளும் சான்றுப் பொருள்களாகக் கிடைத்திருக்கின்றன. இவ்வாறான நிலையில் அங்கு காணப்பட்ட இந்தப் புதைகுழி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புதைகுழிகளாக இருக்கலாம் என்ற அச்சம் இப்போது மேலோங்கி வருகின்றது.

மன்னார் திருக்கேதீச்சரம் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு நீண்டகாலமாக உண்மையைக் கண்டறியப்படாமல் இலங்கைப் பேரினவாத அரசின் நீதித்துறையால் மூடி மறைக்கப்பட்டுவருகின்றது. எனவே முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் உள்ள மனிதப்புதைகுழி அகழ்வுப்பணி சர்வதேச நியமத்தின் அடிப்படையிலும், சர்வதேசக் கண்காணிப்பின் ஊடாகவும் மேற்கொள்ளப்படவேண்டும் என தமிழ் மக்களாகிய நாம் வலியுறுத்துகின்றோம்.

தற்போது மனிதப் புதைகுழிகள் வெளிவந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் சிறிலங்கா அரசானது 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' எனும் நாடகத்தை அரங்கேற்றத் தொடக்கி உள்ளது. கடந்த கால அனுபவங்களிலிருந்து உள்ளூர் ஆணைக்குழுக்களோ பொறிமுறைகளோ எவ்வித நீதியையும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை. அதேபோன்று இதுவும் இன்னுமொரு காலத்தை இழுத்தடிக்கும் ஒரு சதியே ஆகும்.

இந்தக் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க தற்போதைய பூகோள பொருளாதார அரசியல் சூழ்நிலையில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்படும் சர்வதேச சக்திகள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும்.

1. தமிழர் தாயகத்தில் காணப்படும் மனிதப்புதைகுழிகளின் அகழ்வுப்பணிகள் சர்வதேச நியமத்தின் அடிப்படையிலும், சர்வதேச கண்காணிப்பின் ஊடாகவும் மேற்கொள்ளப்படவேண்டும்.

2. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச நீதி வழங்கப்படவேண்டும்.

3. தமிழின அழிப்பை மேற்கொண்ட, எமது உறவுகளை காணாமல் ஆக்கிய சிங்கள இராணுவமானது தமிழர் தாயகம் எங்கும் நிலைகொண்டுள்ளது. இந்த இராணுவமானது தமிழர் தாயகத்தில் 1983ஆம் ஆண்டுக்கு முற்பட்ட அளவுக்குக் குறைக்கப்பட்டு முகாம்களுக்குள் முடக்கப்படவேண்டும். அவர்கள் வலிந்து பறித்த தமிழர் நிலங்கள் மீளக் கையளிக்கப்படவேண்டும்.

4. சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

5. காலங்காலமாக நடைபெற்றுவரும் தமிழின அழிப்புக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக நீதி வழங்கப்படவேண்டும்.

6. தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய விகாரைகள் அமைக்கப்படுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நில அபகரிப்புகளும், பௌத்த - சிங்கள மயமாக்கல்களும் உடனடியாக நிறுத்தப்பட்டு காணிகள் மீள கையளிக்கப்படவேண்டும்.

7. மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும், இன அடக்குமுறைக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் வலிந்து காணாமல் ஆக்கப்படவர்களின் உறவுகள், மாணவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இது அவர்களின் பேச்சுரிமை, நடமாடும் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். அத்துடன் தமிழர் தரப்பில் உருவாகும் விடுதலைக்கான தன்னெழுச்சியான அரசியல் வெளியினை ஒடுக்குவதில் சிங்கள - பௌத்த பேரினவாத அரசு குறியாகவே உள்ளது. இவ்வாறான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

8. தமிழ்த்தேசிய இனப்பிரச்சனைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வும், சர்வதேசத்தினால் நடத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணையைப்பெறவேண்டும். இதில் எம்மை நாமே ஆளக்கூடிய தீர்வுகளே தெரிவுகளாக உள்ளடக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (அ-ம-246)

## மரண அறிவித்தல்



தோற்றம்: 05.11.1948 மறைவு : 26.07.2023

### திருமதி கணேசராஜா யோகநாயகி (பாமா)

கல்வத்தை வதிரி கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கணேசராஜா யோகநாயகி அவர்கள் கடந்த புதன்கிழமை (26.07.2023) சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு பாக்கியம் தம்பதியரின் தவப்புதல்வியும், தில்லைநாதனின் (பொறியியலாளர் Australia) சகோதரியும், காலஞ்சென்ற கணேசராஜாவின் (பொறியியலாளர்) அன்பு மனைவியும், இளம்பரிதி, காலஞ்சென்ற வசந்தகுமார் மற்றும் அமுதன் (பொறியியலாளர்), நவதீபன் (U.S.A), நங்கை, குபேரன் (பொறியியலாளர் Australia), கரிகாலன் (வைத்தியர்), சுதந்திரதேவி (மென பொறியியலாளர் Canada), இராகசரஸ்வதி (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், வதனா (மகப்பேறு வைத்திய நிபுணர்), சைலேந்திரி (பட்டய கணக்காளர், Australia), சரளா (ஆசிரியை), மயூரன் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், விஷ்வந்த்ஆதித்யா, செழியன், மீனாள், ஆதித்யன் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
அமுதன் (மகன்)
077 165 8524

106, மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(CS 25718)A-1

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 18 | 28 |
| 07 | 07 |
| 1944 | 2023 |



### கார்த்திகேசு யோகாம்பாள்

சுழிபுரம் திருவடிநிலையை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையையும், மூளாய் வீதியையும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகாம்பாள் நேற்று (28.07.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைரமுத்து இத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னவர் பொன்னார் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பூமாதேவி மற்றும் கனகலிங்கம் (அம்பாள் ஸ்ரோர்ஸ்-வட்டுக்கோட்டை) காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சூரியகுமாரி (சுவிஸ்), செல்வம், ரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதராசா, ரஞ்சிதா, வளர்மதி, புலேந்திரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (கமலா ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை), புண்ணியமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தூரன் (பிரான்ஸ்), அமரர் நந்தூரன், சிந்துஜன், தணுசன், கலைவாணி, சியாமினி, கஜேந்திரன் (சுவிஸ்), கவீந்திரன் (சுவிஸ்), கஜநிதன் (சுவிஸ்), தர்சிகா, லக்சன், தனுஜா, கஜீபன், புவிலவன், பிரதீபன், ரூபிகா, கிருபாகரன், கஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரேஷ்மிகாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி:
077 230 3165
077 9400 845

தகவல்: குடும்பத்தினர்.
கமலா ஸ்ரோர்ஸ்,
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

(CR 40316) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல்களை வழங்குவதற்கு ஆலோசனை அவசியமல்ல!

## தகவல் அறியும் ஆணைக்குழு அறிவுறுத்து

கிளிநொச்சி, ஜூலை 29

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தகவல்கள் கோரப்படும்போது தகவல் அறியும் ஆணைக்குழுவின் ஆலோசனைபெற்று தகவல் வழங்கப்படும் என அறிவிக்க முடியாது. அது சட்டத்துக்கு மாறானது எனத் தகவல் அறியும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. தகவல் அறியும் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற விசாரணை ஒன்றின்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.**

வடக்கு மாகாண மருத்துவமனையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்குப் பிரதியிடப்பட்டது. அதன் பிரதியொன்றை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்திடம் கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளரொருவர் கடந்த பெப்ரவரி மாதம் கோரியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தகவல் அறியும் அலுவலர், "குறித்த தகவலை வழங்குவது தொடர்பில் தகவல் அறியும் ஆணைக்குழுவின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. ஆலோசனை கிடைக்கப் பெற்றதன் பின்னரே தகவல் வழங்கப்படும்" என்று பதிலளித்திருந்தார்.

அதனையடுத்து ஊடகவியலாளர், கடந்த ஏப்ரல் மாதம் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் இதுதொடர்பில் முறையிட்டிருந்தார்.

அதற்கமைவாக மேற்கொண்ட விசாரணையிலேயே வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு மேற்படி அறிவித்தலை தகவல் அறியும் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர் கோரிய தகவல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்பதாக வழங்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது. (ச-214)

# யாழ்.மாநகரசபையின் முத்தமிழ் விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். மாநகரசபை முன்னெடுக்கும் முத்தமிழ் விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வை மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமை தாங்கவுள்ளார். நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பங்கேற்கவுள்ளார்.

யாழ்.மாநகரசபையின் உயர் விருதான 'அரசகேசரி' விருது வழங்கல் மற்றும் பட்டிமன்றம் உள்ளிட்ட பல்வேறு கலை ஆற்றுகைகள் நிகழ்வை சிறப்பிக்கவுள்ளன. (ச-66)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஏழாலை அருள்மிகு ஸ்ரீ அபிராமி அம்பாள் ஆலய மஹோற்சவம் கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்த விழாவில் தெல்லிப்பழை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ய)

# பொலிஸோ இருட்டறையில் மக்களோ அச்சத்தில்!

## ஆளும் கட்சி உறுப்பினரே குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 29

வவுனியா மாவட்டத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. தடுக்க வேண்டிய பொலிஸாரால் காத்திரமான ந வடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. அதனால் மக்கள் அச்சச் சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு முழுக்காரணம் பொலிஸாரே. -இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மாதங்களாக வவுனியா மாவட்டத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளமையால் மக்கள் அச்சஉணர்வுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் வீடொன்றுக்குள் புகுந்த கும்பலொன்று வீட்டிலுள்ளோரை வாள்களால் வெட்டி, வீட்டைத் தீக்கிரையாக்கியுள்ளது. பலர் காயமடைந்துள்ளதுடன் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் சந்தேகத்தின் பேரில் கூட கைதுசெய்யப்படவில்லை. பொலிஸார் குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டித்தாலே குற்றச்செயல்கள் குறைவடையும்- என்றார். (ச-18)

# வடக்கு கராத்தே போட்டி 92 பதக்கங்கள் வென்று பலம்காட்டியது மன்னார்

தலைமன்னார், ஜூலை 29

வடக்கு மாகாண கராத்தே போட்டியில் 92 பதக்கங்களை மன்னார் மாவட்டம் தட்டிச்சென்று சாதனை புரிந்துள்ளது. அத்துடன் மன்னார் மாவட்டத்திலிருந்து பங்கேற்ற 38 மாணவர்களில் 36 மாணவர்கள் தேசிய கராத்தே போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

கடந்த வாரம் சனி , ஞாயிறு ஆகிய இரு தினங்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு அரங்கில் வடக்கு மாகாண கராத்தே போட்டி இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் மடு கல்வி வலயத்தில் 63 மாணவர்களும் மன்னார் கல்வி வலயத்தில் 29 மாணவர்களும் மொத்தமாக 92 பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் 50 தங்கப்பதக்கங்கள், 32 வெள்ளிப்பதக்கங்கள், 10 வெண்கலப்பதக்கங்கள் என்பவற்றை முதன்முறையாகப் பெற்று மன்னார் சாதனையீட்டியுள்ளது. அத்துடன் ஆறு மாணவர்கள் மாகாண சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பாளராக - கராத்தே தலைமை ஆசிரியராக- சக்கூறா சோட்டக்கான் கராத்தே மன்னார் கிளையின் தலைவரும் ஆசிரியருமான அருளானந்தம் அமல்ராஜ் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-60)

# தோழர் விஜே டலஸ் நினைவுகூரல் இன்று

கொழும்பு, ஜூலை 29

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளருமான தோழர் விஜே டலஸை நினைவுகூரும் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வை அனைத்துலக இளைஞர் மற்றும் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. (ச-ரி2)

# ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிகழ்வுகள் ஆயத்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஜூலை 29

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிகழ்வுகள் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளன. நூற்றாண்டு நிகழ்வில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலான முன்னாயத்தக் கலந்துரையாடல் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் முன்னாள் ஆசிரிய மாணவர்கள், கடந்தகாலக் கற்கை அணி சார்ந்த பிரதிநிதிகளைத் தவறாது பங்கேற்குமாறு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் அழைப்பு விடுத்துள்ளார். (ச-ரி2- 66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பணிப்பெண் சிறுமி சாவு; பொலிஸ் குழுக்கள் களத்தில்

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கல்வியங்காட்டுப் பகுதியில் வீடொன்றில் பணிக்கு அமர்த்தப்பட்ட சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளமை தொடர்பில் இரண்டு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை முதலி கோவிலடியைச் சேர்ந்த கேதீஸ்வரன் தர்மிகா (வயது-17) என்ற சிறுமியே கடந்த ஞாயிற்றுக்கிழமை பணிபுரிந்த வீட்டில் தூக்கில் தொங்கியவாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சிறுமியை பார்க்க யாரும் வரக்கூடாதென்று தெரிவித்த வீட்டு உரிமையாளர் மாதத்தில் ஒருமுறை மாத்திரமே உறவினர்களுடன் கதைக்க முடியுமென்றும் தெரிவித்ததாக உறவினர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இரண்டு பொலிஸ் அணிகள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான இரண்டு அணிகளே இந்த விசாரணையில் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-26-66-20)

### முல்லையில்...

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினரால் அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தாலுக்கும் பேரணிக்கும் பல அரசியல் கட்சிகளும், வணிக நிறுவனங்களும், பொது அமைப்புகளும் தமது பூரண ஆதரவைத் தெரிவித்தன. இதனால், தமிழர் தாயகத்தின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது. குறிப்பாக முல்லைத்தீவில் நேற்று தனியார் போக்குவரத்து முற்றாக முடங்கியது. வணிக நிறுவனங்களும் பூட்டப்பட்டன.

ஹர்த்தாலின் மறுபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்டனப் பேரணியும், போராட்டமும், இறுதிக்கட்டப் போரின் போது தமிழ் மக்கள் இராணுவத்தினரிடம் உறவுகளைக் கையளித்ததாகக் கூறப்படும் பகுதியான முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு அருகில் ஆரம்பமானது. இந்தப் பேரணி மாங்குளம் - முல்லைத்தீவு வீதியூடாகச் சென்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தை அடைந்தது. அங்கு பிரமாண்டமான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-246)

### சீனக்...

சீனா அடுத்த ஐந்து வருடங்களில், கடற்படைத் தளங்களை அமைக்கவுள்ள நாடுகளைப் பட்டியலிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கையின் அம்பாந்தோட்டையும் உள்ளது. ஈகுவடோரியல் கினியா, பாகிஸ்தான், கமரூன் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த பிரதான தெரிவுகளாக உள்ளன.

அந்த ஆய்வறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

அம்பாந்தோட்டையை பீஜிங்கின் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே சீனா விரும்புகிறது. சீனா ஐ.நா. பொதுச்சபையில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்ததை இந்தக் கடற்படைத் தளத்தை அமைப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்குத் துரும்புசீட்டாகப் பயன்படுத்தும். சீனா தனது பொருளாதாரப் பலத்தை இராணுவத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தி வந்துள்ளது. 2000 - 2021 காலப்பகுதியில் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கி 40 நாடுகளில் 78 துறைமுகங்களை சீனா அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

### ஆனைக்கோட்டைப்...

**இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பின்**னிரவு அல்லது நேற்று முன்னிரவு நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. கண்ணாடிப் பேழைகளுக்குள் வைக்கப்பட்டிருந்த இந்தச் சொரூபங்கள் கற்களால் எறிந்து உடைக்கப்பட்டிருக்கின்றன என்றும் ஆனைக்கோட்டை - உயரப்புலத்துக்கு அண்மித்த (சுற்றியுள்ள) பகுதியில் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்தனர். சி.சி.ரி.வி. கமராக்களின் பதிவுகளைப்பெற்றும் பொலிஸார் புலன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ம,ச,20,26,27)

### மாகாணங்களின்...

என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் எதிர்பார்த்த புதிய அரசியல் பயணத்தின் ஆரம்பமாக இந்த முயற்சிகள் ஜனாதிபதியால்பெரும்சவாலுடன்முன்னெடுக்கப்படுகின்றன என்றும் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் தேசிய அளவில் மீண்டும் ஒரு கருத்தாடல் ஆரம்பமாகியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகள் செய்ய முயற்சிக்காத ஒரு பணியை, தற்போதைய ஜனாதிபதி திடீரென ஆரம்பித்திருப்பது ஏன்? என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இதில் உண்மை இல்லை. வரலாற்றில் அனைத்து ஜனாதிபதிகளும் இது குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயகத்தை மதிக்கும் ஒரு தலைவராக 13ஆவது திருத்தம் தொடர்பில் பல கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளார். இது ஒரு பிரபல்யமற்ற தீர்மானமாக இருந்தாலும் ஜனாதிபதி, இவ்விடயம் குறித்து தமது விசேட அவதானத்தைச் செலுத்திச் செயற்படுவது பாராட்டுக்குரியது. மாகாணசபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்குவதா? அல்லது அதற்கு மேலதிகமான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமா? அல்லது இந்த மாகாணசபை முறையை நீக்க வேண்டுமா? என்பதை பொதுமக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றமே தீர்மானிக்கவேண்டும்.

பொலிஸ் அதிகாரம், மாகாணசபைகளுக்கு வழங்கப்பட வேண்டுமா? என்ற கேள்விக்கு பல தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை முன்வைப்பதோடு, பொலிஸ் அதிகாரம் என்ற விடயத்தில் ஆயுதம் தாங்காத பொதுமக்கள் பொலிஸ் முறையை வழங்குவது குறித்து கவனம் செலுத்தலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருப்பது ஒரு சிறந்த விடயமாகும். நாட்டு மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான தொடர்புப் பொறிமுறையை மாற்றாமல் இந்த நாட்டை ஆளமுடியாது. இதனை இந்தநாட்டு மக்களும், இந்த நாட்டை ஆட்சி செய்யப்போகும் இளைஞர்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். அரச செயற்பாடுகளை மாற்றியமைக்க வேண்டுமாயின் அனைத்துக் குடிமக்களின் அபிலாஷைகள், அரசியல் அபிலாஷைகள் மற்றும் சமூகத் தேவைகளை நிறைவேற்றுவது அவசியமாகும்.

குடிதண்ணீர், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுவதே இன்று 95 வீதமான தமிழ் பேசும் மக்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டமாக இருக்கின்றது. போர் நிறைவடைந்து பல வருடங்கள் கடந்துள்ளபோதிலும் தமிழ் மக்களின் தேவைகள் நிறைவேறவில்லை. தமிழ்த் தலைவர்களுக்கிடையிலான விரிசலை அரசியல் இலாபங்களுக்காக நாம் பயன்படுத்தக்கூடாது. அதற்கு அப்பாற்சென்று தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் வகையில் செயற்படவேண்டும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்கள் வெற்றியடைய வேண்டுமாயின் ஒரு தரப்பு மீது இன்னொரு தரப்பு வைக்கும் அரசியல் நம்பிக்கை மூலமே அது சாத்தியமாகும். தமிழகத்தால் 12 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைய முடியுமென்றால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் எம்மால் தெற்காசியாவில் பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடாக மாற முடியும் - என்றார். (அ-ம)

### நண்பன்...

அழைத்து, பின்னர் அந்த இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கீரிமலை, நல்லிணக்கபுரம் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவருக்கே இவ்வாறு அழைப்பு மேற்கொள்ளப்பட்டு வாள்வெட்டு நடத்த எத்தனிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக இளைஞர் சுதாகரித்துக்கொண்டு கூக்குரல் எழுப்பித் தப்பியுள்ளார். சத்தத்தைக்கேட்டு பொதுமக்கள் வெளியில் வந்ததையடுத்து, தாக்குதல் நடத்த வந்தவர்கள் இளைஞரின் மோட்டார்சைக்கிளை பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர். இது தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### குற்றங்களைத்...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. கிளிநொச்சி, சிவபுரம் கிராமத்தில் விழிப்புக் குழுக்களை உருவாக்கி இவ்வாறான சமூக விரோதச் செயல்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சியின் இதர பகுதிகளிலும் விழிப்புக் குழுக்களை உருவாக்கினால், கசிப்புக் காய்ச்சுதல், மணல் அகிழ்வு உள்ளிட்ட பல்வேறுபட்ட சமூக விரோதச் செயல்களை கட்டுப்படுத்தலாம் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இதனையடுத்தே இந்த விழிப்புக் குழுக்களின் தேவை தொடர்பில் தற்போது பரிசீலிக்கப்படவுள்ளது. (அ-ம-27)

### பொறுப்புக்கூறலை...

பாடுகளுக்கு எதிராக, நியாயமான தீர்வினை வழங்க சர்வதேசம் நேரடியாகத் தலையிடவேண்டும் என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைரசாரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற கவனவீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நியமத்தின் அடிப்படையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுகள் இடம்பெறவேண்டும் என்பதுடன், சர்வதேசக் கண்காணிப்பில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடாகவிருக்கின்றது. ஆதலால், காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக, இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசுக்கு சர்வதேசம் அழுத்தத்தை வழங்கவேண்டும்.

இதுதவிர குருந்தூர்மலை விவகாரத்தில் எமது சைவ வழிபாடுகளை மேற்கொள்ளலாமென நீதிமன்று கட்டளை பிறப்பித்தும், அந்தக் கட்டளைகளுக்கு எதிராக சில இனவாத அரக்கர் கூட்டம் எம்மை வழிபாடுகளில் ஈடுபடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றது. எனவே சர்வதேசத்தின் தலையீடே இந்த எல்லாவிதமான இனப்பிரச்சினைகளுக்குமான தீர்வு - என்றார். (அ-ம-246)

**காணி விற்பனைக்கு**
கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**077 781 3417**

**கடை வேலைக்கு ஆள் தேவை**
பலசரக்கு கடை வேலைக்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை.
**T.P:077 628 0685**

**விற்பனைக்கு**
யாழ். நகரில் மிக நல்ல நிலையில் உள்ள Honda D.I.O நீலம் மற்றும் வெள்ளை நிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
BIO 2XXX (CS/51433) AH-1
**077 613 8964**

**தொழிலாளர்கள் தேவை**
பலாலி வீதி புன்னாலைக் கட்டுவன் சந்தியில் அமைந்துள்ள ஹார்ட்வெயார் கடைக்கு தொழிலாளர்கள் தேவை.
சம்பளம் நேர்காணலில் நேரடியாக முடிவு செய்யப்படும்.
மேலும் விவரங்களுக்கு:
**077 620 1897**
என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.